**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. DVC.No. 11 of 2025**

**Prosecution Witness: PW2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : அன்புசெல்வன் | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**Dated.19.06.2026**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 3ம் தரப்பினராவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தினை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். எனது ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை (எதிர் மனுதாரர்கள் தரப்பில்)**

நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கான விவரங்கள் மனுதாரர் சரண்யாவால் சொல்லப்பட்டது என்றால் சரிதான். நான் மனுதாரரின் திருமணத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். திருமணத்தின் போது மனுதாரரின் பெற்றோர்கள் 1ம் எதிர்மனுதாரருக்கு 5 பவுன் தங்க நகை, 1 பவுன் மோதிரம்

அணிவித்தார்கள் என்றால் 1ம் எதிமனுதாரருக்கு 1 பவுன் மோதிரமும், மனுதாரருக்கு 10 பவுன் நகைகளும் அணிவித்தார்கள். மனுதாரரின் அப்பா கூலி வேலைக்கு செல்வார் என்றால் சில சமயங்களில் பெயிண்டிங் வேலைக்கு செல்வார். சில சமயங்களில் கூலி வேலைக்கு செல்வார். மனுதாரரின் திருமணத்தின் போது அவரது குடும்பத்திற்கு வருமானம் என்பது மனுதாரரின் அப்பாவினுடைய வருமானம் மட்டும் தான் என்றால் சரிதான். மனுதாரரின் அப்பா வெளிநாட்டில் எத்தனை வருடங்கள் இருந்தார் என்றால் 3 வருடங்கள் இருந்தார். எந்த நாட்டில் இருந்தார் என்றால் துபாயில் இருந்தார். மனுதாரரின் அப்பா அவருடைய சம்பளத்தை அவரின் வீட்டில் உள்ள நபர்களின் வங்கி கணக்கிற்கு அனுப்புவார் என்றால் சரிதான். அந்த வங்கி கணக்கை தாக்கல் செய்தால் அவரின் வருமானம் தெரிய வரும் என்றால் சரிதான். திருமணத்தின் போது மனுதாரர் தரப்பில் அணிவிக்கப்பட்ட நகைகள் தற்போது மனுதாரரிடம் உள்ளதா என்றால் இல்லை. நான் சொல்வது போல் மனுதாரரின் பெற்றோர்கள் 10 பவுன் நகை கொடுக்கும் அளவிற்கு வசதி உள்ளவர்கள் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு அணிவித்த 5 பவுன் நகைகளும், ஒரு பவுன் மோதிரமும் தற்போது மனுதாரரிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. தற்போது மனுதாரர் வேலைக்கு செல்கிறாரா என்றால் இல்லை. மனுதாரர் எப்போது வேலைக்கு சென்றார் என்றால் திருமணத்திற்கு பின்னால் மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் சென்னையில் இருக்கும் போது மனுதாரர் வேலைக்கு சென்றார். மனுதாரர் எந்த கம்பெனிக்கு வேலைக்கு சென்றார் என்றால் தொலைபேசி உதிரி பாகங்கள் செய்யும் கம்பெனிக்கு வேலைக்கு சென்றார். சென்னையில் இருக்கும் போது மனுதாரர் வேலைக்கு செல்லவில்லை என்றாலும்,

தற்சமயம் மனுதாரர் வேலைக்கு செல்கிறார் என்றாலும் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் 4 வது பத்தியில் எதிர்மனுதாரர்கள் மனுதாரரை ஆபாசமாக திட்டி, கொடுமைகள் செய்தனர் எனவும், கூடுதல் நகைகள் கேட்டார்கள் எனவும், 2ம் எதிர்மனுதாரர் மனுதாரரிடம் தவறாக நடக்க முயன்றதாகவும், சொல்லியுள்ள நிலையில் அந்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வரதட்சணை தொடர்பாக புகார் கொடுத்தால் போலீசார் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மனுதாரர் என்னிடம் மேற்சொன்ன விவரங்களை சொன்ன பிறகு நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 7 வது பத்தியில் 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் மனுதாரரை ஆபாசமாக திட்டி கூடுதலாக நகைகள் கேட்டு மிரட்டி, பல வழிகளில் கொடுமைகள் செய்து வந்ததை நான் நேரடியாக பார்த்தேன் என சொல்லியுள்ள நிலையில் அது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. 4ம் எதிர் மனுதாரர், 5ம் எதிர்மனுதாரரை திருமணம் செய்து கொண்டார் என என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 6 வது பத்தியில் சொல்லியுள்ள நிலையில் அதுகுறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரர் என்னிடம் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்களை சொன்னார் என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் நடவடிக்கை சரியில்லாத காரணத்தினால் தான் 1ம் எதிர்மனுதாரர் மனுதாரர் மீது குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் விவரங்களையும், முசிறி சார்பு நீதிமன்றத்தில் நடக்கும் வழக்கின் விவரங்களையும் நான்

மனுதாரரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். நான் மனுதாரரின் உறவினர் என்பதால் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான், விஸ்வநாதன், சித்தாரா ஆகியோர் எதிர்மனுதாரர் வீட்டிற்கு சமரசம் பேச சென்றோம் என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் வழக்கிற்கு வலு சேர்க்க வேண்டும் என்பதற்காக நடக்காத சம்பவங்களை தெரிந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் கேட்பு நிலை சாட்சியம் என்பதால் என்னுடைய சாட்சியம் நிராகரிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.19 12:05:31 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி